பக்கங்கள்:-22

காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 27 | வியாழக்கிழமை | 11.09.2025 | அதிர்வு 041 |
|---|---|---|---|---|---|

## விஜேராம இல்லத்தில் இருந்து இன்று வெளியேறும் மஹிந்த

### தங்காலையில் வரவேற்பு நிகழ்வு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு – விஜேராம இல்லத்தில் இருந்து 06



# மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டில் நிச்சயம்

## சாணக்கியனிடம் ஜனாதிபதி நேற்று நேரில் உறுதி ஆயினும் நடத்தும் முறைமை குறித்து குழப்பம்



'நீண்டகாலம் நடத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டில் நிச்சயமாக நடக்கும். அதில் எந்தச் சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை."

- இப்படி தம்மை நேற்று நேரில் சந்தித்துப் பேசிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார். 06

# பிரச்சினைகளைத் தீர்க்க அரசுக்கு திறமையில்லையேல் நாடே அழியும்

## நேபாளத்தின் தற்போதைய நிலையை சுட்டிக்காட்டி ரணில் விசேட அறிக்கை



"நேபாளத்தில் நீண்ட காலமாகக் காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. தெற்காசிய பாரம்பரியத்தின்படி, கடுமையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், அனைவரும் அன்றாட அரசியலில் கவனம் செலுத்தியமையே இளைஞர்களிடையே பெரும் விரக்தியை ஏற்படுத்தியிருக்கின்றது. பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கத்துக்குத் திறமையின்மையே நேபாளத்தின் அழிவுக்குக் காரணமாகியுள்ளது." 06




ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கும் இடையில் நேற்று நாடாளுமன்றத்தில் சுமார் அரை மணி நேரம் நடைபெற்ற தனியான சந்திப்பில் பல முக்கிய விடயங்கள் இடம் பெற்றிருக்கின்றன என்று தெரிய வருகின்றது.

பல முக்கிய அம்சங்களை சாணக்கியன் சுட்டிக்காட்டிய போது அவற்றை மிகக் கவனமாக ஜனாதிபதி செவிமடுத்து உள்வாங்கிக் கொண்டார் எனத் தெரிகிறது.

மாகாண சபைத் தேர்தல், அதனை நடத்தும் முறைமை மற்றும் மாகாண எல்லை நிர்ணயத்தின் பின்னரே அந்தத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதிக்கே தெரியாமல் அரசு தரப்பினால் அறிவிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றமை பற்றிய விடயங்கள் இன்றைய தலைப்புச் செய்தியிலும் ஆசிரியர் தலையங்கத்திலும் தனியாக கையாளப்பட்டுள்ளமையால் அது பற்றிய விடயங்களை இப்பத்தியில் தவிர்த்துக் கொள்கிறேன். 06

# வலி. வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன்?

## நாடாளுமன்றத்தில் சிறீதரன் எம்.பி. கேள்வி



"நாட்டில் போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள பின்னரும், வலி காமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடி யேற்றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன்? புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்தை அண்மித் துள்ள நிலையில், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்து இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக் கைகள் என்ன?"

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலை வரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பி னார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற அமர்வின் போது நிலையியற் கட்டளை 27/ 2இன் கீழ் விசேட கூற்றை முன்வைத்து உரையாற் றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகா மம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் 13 கிராம அலுவலர் பிரிவுக ளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்கள், பலாலி இராணுவ முகாம் இராணுவத்தினரின் வருகை மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக 1990.06.15ஆம் திகதி தமது சொந்த மண்ணில் இருந்து இடம்பெயர்ந்தார் கள்.

இந்த இடப்பெயர்வு நிகழ்ந்து 35 வருடங்கள் கடந்தும், நாட்டில் போர் முடிவடைந்து 16 வருடங்கள் நிரம்பிய பின்னரும் இன்றுவரை மீள்குடியேற்றப் படாத நிலையில் உள்ள அந்த மக்கள், இந்த நாட்டுக்குள்ளேயே இடைத்தங்கல் முகாம்களிலும்,உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் சொல்லொணாத் துன்பங்க ளுக்கு மத்தியில் ஏதிலிகளாக வாழ்ந்து வருகின்றார்கள்.

கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 700 ஏக்கருக் கும் அதிக விஸ்தீரணமுடைய காணிக ளைக் கொண்ட மயிலிட்டி, பலாலி, வசா விளான்,கட்டுவன், குரும்பசிட்டி, குப்பி ளான், தையிட்டி, ஊறணி,தோலகட்டி உள் ளிட்ட பல ஊர்களைச் சேர்ந்த மக்கள், தமது சொந்தக் காணிகளில் குடியேறும் உரிமை பறிக்கப்பட்டவர்களாகவே இன்றும் வாழ்கின்றார்கள். ஆட்சி மாற றங்கள், அரசு மாற்றங்களின் பின் னும் அவர்களது மீள்குடியேற்றம் சாத்தி யப்படுத்தப்படாமை பாதிக்கப்பட்ட ஒவ் வொரு குடும்பத்தினரதும், அவர்களது பிள்ளைகளினதும், அடுத்த தலைமுறை யினதும் எதிர்காலத்தையே கேள்விக் குட்படுத்தியிருக்கின்றது.

எனவே, யாழ்ப்பாணம் மாவட்டம் வலி காமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 13 கிராம அலுவலர் பிரிவுக ளில் இருந்தும் கடந்த 36 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து, இன்று வரை சொந்த மண்ணில் மீள்குடியேற முடியாது இந்த நாட்டுக்குள்ளேயே ஏதிலிகளாக வாழ்ந்து வரும் குடும்பங்கள் எத்தனை என்பதை அமைச்சர் அறிவாரா?

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர் வையில், இந்த மக்களுக்குச் சொந்த மான எத்தனை ஏக்கர் காணிகள் இன்றள வும் இராணுவத்தினரால் கையகப்படுத் தப்பட்டுள்ளன என்பதையும், குறித்த காணிகள் ஏன் இதுவரை விடுவிக்கப் படவில்லை என்பதையும் அமைச்சர் இந்தச் சபைக்கு அறிவிப்பாரா?

இந்த நாட்டில் போர் முடிவுற்று 16 ஆண்டுகளின் பின்னரும் வலிகாமம் வடக்கு பிரதேச மக்களின் மீள்குடியேற் றம் வலிந்து தவிர்க்கப்பட்டு வருவது ஏன் என்பதையும், இதனால் சொந்த மண்ணில் குடியேறி வாழ முடியாதவர் களாக அந்த மக்கள் படும் அவலங் கள் எத்தகையவை என்பதையும் அமைச் சரால் இந்தச் சபைக்கு அறிவிக்க முடியுமா?

திய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தை அண்மித்துள்ள நிலையில், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்து இதுவரை மேற் கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் இந்தச் சபைக்கு அறிவிப்பாரா? இது விடயமாக, தங்கள் அமைச்சால் ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் எப் போது சாத்தியமாகும் என்பதை இந்தச் சபையில் பகிரங்கமாகத் தெரிவிக்க முடியுமா? அத்தகைய நடவடிக்கைகள் எவையேனும் இதுவரை மேற்கொள் ளப்படவில்லை எனின் மேற்குறித்த மீள் குடியேற்ற விடயம் காலதாமதமாவதற் கானகாரணம்என்னஎன்பதைஅமைச்சர் அறிவிப்பாரா?" – என்று கேள்விகளை எழுப்பினார்.

# அஸ்வெசும கொடுப்பனவு நாளை வைப்பிலிடப்படும்

செப்டம்பர் மாதத்துக்கான அஸ்வெசும உதவித் தொகை நாளை பயனாளிக ளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

11,201,647,000 ரூபா தொகை 1,412,574 பயனாளி குடும்பங்களுக்கு வழங் கப்பட்டு, அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, நாளை முதல் பயனாளிகள் தங்களது வங்கிக் கணக்குகள் மூலம் அஸ்வெசும உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

# யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்படாமல் இருக்கும் காணிகளை முறையாக விடுவிக்க நடவடிக்கை

## சபையில் அமைச்சர் அனுர கருணாதிலக தெரிவிப்பு



"பல்வேறு காரணிகளால் இடம்பெயர்ந்தவர்களை அவர்களின் சொந்தக் காணிகளிலேயே மீள்குடியேற்ற வேண்டும் என்ற கொள்கைகளுடனேயே அரசாங்கம் செயற்படுகின்றது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விடுவிக்கப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகளை முறையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

– இவ்வாறு நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமைநடைபெற்ற அமர்வின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் வலிகாமம் வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கில் 2010ஆம் ஆண்டில் 12 ஆயிரத்து 376 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 699 பேர் இடம்பெயர்ந்தவர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 10 ஆயிரத்து 981 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலச்சத்து 8 ஆயிரத்து 693 பேர் மீள் குடியேற்றப்பட்டிருந்தனர்.

எனினும், ஆயிரத்து 395 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 6 பேர் மீள்குடியேற்றப்படாமல் இருக்கின்றனர். இதேவேளை, 2009 காலத்தில் 23 ஆயிரத்து 850 ஏக்கர் காணி முப்படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.

அவற்றில் பெரும்பாலான பகுதி விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது 2 ஆயிரத்து 583 ஏக்கர் பகுதி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும் என்ற கொள்கையிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது.

இதன்படி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஊடாக அந்தக் காணிகளை மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதேபோன்று மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் போன்ற தேசிய பொருளாதாரத்துக்கு முக்கியமான இடங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அங்கு மூடப்பட்டிருந்த வீதிகளும் திறக்கப்பட்டுள்ளன.

இந்த அரசாங்கம் வடக்கு மக்களுக்காக வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக பெருமளவு நிதிகளை ஒதுக்கியுள்ளது. அங்கு பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன." – என்றார்.




# இடைத்தரகர்கள் தொடர்பை தவிர்க்கவும்; வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

வெளிநாடுகளில் தொழில் தேடுவோர், அங்கீகரிக்கப்படாத முகவர்கள் அல்லது இடைத்தரகர்களுடனான தொடர்புகளைத் தவிர்க்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட இந்த வேலைவாய்ப்புகளுக்குப் பணம் செலுத்துவது அல்லது எந்தவொரு கட்டணத்தையும் கோருவது சட்டவிரோதமானது என்று பணியகம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் அனைத்தும், இணைய வழியாகவே சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற நிலையில், விண்ணப்பத்தாரிகளை விழிப்புடன் செயற்படுமாறும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கோரியுள்ளது.

# பெருந்தோட்ட பகுதி தரிசு நிலங்களை பயிர் செய்கைக்கு வழங்க நடவடிக்கை



பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களைப் பயிர் செய்கைக்காக வழங்குமாறு பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மொழி மூலமான கேள்வி நேரத்தின் போது, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள காணிகளை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் போது, ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தம் மிகவும் பாரதூர மானது.

அது அரசுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது,

இந்த நிலையில், பெருந்தோட்ட நிறுவனங்களுடன், பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு மற்றும் தரிசு நிலங்களைப் பயிர் செய்கைக்காகப் பயன்படுத்துவது குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட பகுதிகளில் தரிசு நிலங்கள் இருப்பதற்கு இனியும் இடமளிக்க முடியாது.

இந்த நிலையில், பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழுள்ள தரிசு நிலங்களில் பயிர் செய்கை செய்யப்பட வேண்டும் என நேற்றைய பேச்சுவார்த்தையில் வலியுறுத்தியுள்ளோம்.

பெருந்தோட்ட நிறுவனங்கள் இதனை ஏற்றுக்கொள்ளாது போனால், அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து, அந்த இடங்களில் பயிர் செய்கையை முன்னெடுக்கும்.” என்றார்.





# எல்லவில் விபத்திற்குள்ளான பஸ்ஸின் உரிமையாளர் கைது

எல்ல - வெல்லவாய வீதியின் 23ஆம் கிலோ மீற்றர் மைல்கல்லுக்கு அருகில் பள்ளத்தில் வீழ்ந்து விபத்திற்குள்ளான பஸ்ஸின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பஸ்ஸை முறையாக பராமரிக்காமை தொடர்பான குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தங்காலை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்ததுடன், 17 பேர் காயமடைந்தனர்.


உயிரிழந்தவர்களில் 12 பேர் தங்காலை நகர சபை ஊழியர்களாவர்.

விபத்திற்குள்ளான பஸ்ஸின் சிதைவுகளைமோட்டார்போக்குவரத்துதிணைக்கள அதிகாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் ஆய்வு செய்தனர்.

ஒரு வாரத்திற்குள் குறித்த அறிக்கை தமக்கு கிடைக்கப்பெறுமென மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார்.

# பஸ் கட்டணத்தை வங்கி அட்டை மூலம் செலுத்தும் முறைமை உருவாக்கப்படும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



பஸ் கட்டணங்களை வங்கி அட்டைகள் மூலம் செலுத்துவதற்கான முறைமை ஒன்று உருவாக்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் பொருளாதார மாதத்திற்கு இணையாக, செயற்கை நுண்ணறிவு தொடர்பான உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் எனவும் ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

டிஜிட்டல் மயமாக்கலால் வலுவூட்டப்பட்ட நாடாக இலங்கையை மாற்றி அமைக்கும் பயணத்தைத் துரிதப்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமாக செப்டம்பர் மாதம் டிஜிட்டல் பொருளாதார மாதமாகப் பெயரிடப்பட்டுள்ளதாகப் பிரதமர் தெரிவித்தார்.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தை அமெரிக்க டொலர் 15 பில்லியனாக அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 வீதமாக டிஜிட்டல் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் சவாலான இலக்கை அடைவதுடன், டிஜிட்டல் துறையில் ஏற்றுமதியை அமெரிக்க டொலர் 5 பில்லியனாகவும், டிஜிட்டல் துறைசார் தொழிலாளர்களின் எண்ணிக்கையை இரண்டு லட்சமாகவும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சாணக்கியன் மிக முக்கியமான விடயம் ஒன்றை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத் தினார்.

அரசுத் தரப்பில் சபை முதல்வராக இருக்கும் பிமல் இரத்நாயக்காவின் நட வடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளினால் தமிழர் தரப்போடு அரசுத் தரப்பு இணைந்து செயல்படுவது பெரும் சிக்கலுக்கு உள் ளாகி இருப்பதாக சாணக்கியன் சுட்டிக் காட்டினார்.

"கட்சியின் செயலாளர் சுமந்திரனைப் பகிரங்கமாக உங்களின் சபை முதல்வர் பிமல் இரத்நாயக்கா 'இனவாதி' என்று அறிவித்துக் கொண்டு, யாரோடு இனப் பிரச்சினைக்கு சமரசம் செய்யப் போகின் றீர்கள்?" – என்று சாணக்கியன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்க முடியாமல் சிரத்தையுடன் அதனை உள்வாங்கினார் ஜனாதிபதி.

"சுமந்திரன் எத்தகையவர் என்பது எங்களை விட உங்களுக்குத் தான் நன்கு தெரியும். அவரை இனவாதி என்று விமர் சித்து, நீங்கள் இனப்பிரச்சினைக்கு யாரோடு தீர்வு காணப் போகிறீர்கள்?" – என்று சாணக்கியன் எழுப்பிய கேள்விக்கு ஜனாதிபதியிடம் பதில் இருக்கவில்லை.

"பிமல் இரத்நாயக்கா வேண்டுமென்றே இந்தியத் தரப்போடு பகைத்துச் செயல் படுகிறார். காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு இந்தியா தந்த நிதியை வேண்டுமென்றே நிராகரித்து நடவ டிக்கை எடுக்காமல் அவர் புறமொதுக் குகின்றமை இந்தியத் தரப்பில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்திருப்பதாக நாங் கள் அறிகிறோம். இன்றைய நிலை யில் பொருளாதார நெருக்கடியில் சிக் கிய இலங்கைக்கு 4.2 பில்லியன் டொலர் அவசர உதவிகளை இந்தியா வழங்கியிருக்கின்றது. அதனை இந்தியா இப்போதே மீளச் செலுத்துங்கள் என்று கேட்டால் என்ன செய்வீர்கள்?" – என ஜனாதிபதியை எச்சரித்தார் சாணக்கியன்.

"பிமல் இரத்நாயக்காவின் போக்கும் அணுகுமுறையும் நிச்சயம் உங்கள் அரசுக்கு இந்தியாவுடன் பகைமைப் போக்கை – எதிர்ப்புணர்வை – ஏற்படுத் தும்" – என்று எச்சரித்தார் சாணக்கியன்.

"இல்லை...இல்லை... இந்தியாவோடு அப்படி பகைத்துக் கொள்ள மாட்டோம். நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த இந்திய உதவி எங்களுக்கு கட்டாயம் தேவை. அவர்களை அனுசரித்து நடப் போம்!" – என்று ஜனாதிபதி உறுதி கூறினார்.

வாகன இறக்குமதிக்காக பெருந் தொகை பணம் அந்நிய செலாவணி கரைந்து கொண்டிருக்கின்றது, அது தொடர்பில் நாங்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்றார் ஜனாதிபதி.

வடக்கு – கிழக்குக்கென வெளி நாட்டில் தனியான அபிவிருத்தி நிதியம் ஒன்றை அமைத்து, அதனை அரச அங் கீகாரத்தோடு தனித்து இயங்கச் செய் யும் திட்டம் ஆலோசனை மட்டத்தில் முன் னெடுக்கப்பட்ட நிலையில், இடையில் தடைப்பட்டுள்ளது என்பதை சாணக்கி யன் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

தாம் அதை நினையாப் பிரகாரமாக மறந்துவிட்டார் என்று கூறிய ஜனாதிபதி, சம்பந்தப்பட்ட தரப்புகளை தன்னுடன் உடன் தொடர்பு கொள்ளும்படி கோரியமை யுடன் விரைந்து அதனை ஆரம்பிப்போம் என்றும் உறுதி கூறினார்.

"எனக்கு இன்னும் ஒரு மாதம் தாருங் கள். அதுவரை பொறுங்கள். அதிரடி மாற்றங்கள், பெரிய தலைகீழ் நடவடிக் கைகள் எடுப்பேன். அப்போது எல்லாம் சரியாக வரும்" – என்றார் ஜனாதிபதி.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்பு உரிமைகளை ரத்து செய்யும் சட்டம் நிறை வேற்றப்பட்டிருப்பது குறித்து சாணக்கி யன் கேள்வி எழுப்பிய போது, "சட்டம் நடை முறைக்கு வந்து விட்டது. அதன்படி செயற்பட வேண்டியது முன்னாள் ஜனா திபதிகளின் தார்மீகக் கடப்பாடு. அதற்காக அவர்களை நாளையே நாங்கள் கழுத் தைப் பிடித்து தள்ளுவோம் என்று அர்த்த மல்ல. சட்டம் நிறைவேறி இருக்கிறது, சரியானதை அவர்கள் செய்ய வேண்டும். அவர்கள் செய்வார்கள் என எதிர்பார்க்கி றேன்." – என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதாவது முன்னாள் ஜனாதிபதிக ளுக்கு வழங்கப்பட்டுள்ள அரச இல்லங் களில் இருந்து அவர்களை விரட்டி அடிக் கும் வேலையை அரசு இப்போதைக்குச் செய்யாது. ஆனால் அவர்கள் (முன்னாள் ஜனாதிபதிகள்) தங்கள் தார்மீகப் பொறுப்பை புரிந்து கொண்டு நடப் பார்கள் என்று தாம் எதிர்பார்க்கிறார் என்ற கருத்தை ஜனாதிபதி பிரதிபலித்தார்.

இந்தச் சந்திப்புக்கு பின்னர் சுகா தார, ஊடகத்துறை அமைச்சரும், அமைச் சரவை பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ் ஸவுடன் நாடாளுமன்றக் கன்ரீனுக்கு வருகை தந்த ஜனாதிபதி, அங்கு கோடீஸ் வரன் எம்.பி., செல்வம் எம்.பி., சாணக்கி யன் எம்.பி போன்றவர்களுடன் சற்று நேரம் உரையாடிவிட்டுச் சென்றார்.

அச்சமயம் செல்வம் எம்.பி. தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்தார் எனத் தெரிய வந்தது.

நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்காவுக்கும், சாணக்கியன் எம்.பிக் கும் இடையில் இடம்பெற்ற சினேகபூர்வ மான உரையாடல், தமிழரசு கட்சியுடன் ஜனாதிபதியின் இணக்கமான தொடர் பேச்சுக்கு வழி கோலும் எனவும் தெரிய வருகிறது.

அந்த விவரங்களை அவ்விடயம் சற்று முன்நகரும் போது வாசகர்களோடு பகிர்ந்து கொள்வேன்.

---

## பிரச்சினைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை விசேட அறிக்கை யொன்றை வெளியிட்டு இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"நேபாளம் – காத்மண்டுவில் நிலவும் பதற்றமான சூழ்நிலை குறித்து பல ஊடகங்கள் செய்திகளை வெளியிட் டுள்ளன. முதலில் நேபாளத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள இளைஞர்கள் மீதான தாக்குதல் உள்ளிட்ட அனைத்து வகை யான கொலைகளையும் நான் கண்டிக் கின்றேன்.

அதேபோல், முன்னாள் பிரதமரின் வீடு எரிக்கப்பட்டதும், முன்னாள் பிரதம ரின் மனைவி கொல்லப்பட்டதும் மிகவும் சோகமான சூழ்நிலையாகும். அந்தப் படு கொலைக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், அமைச்சர்கள், குறிப்பாக வெளிவிவகார அமைச்சர் மீதான தாக்குதல்கள், நேர்ந்த துயரத்தின் மேலும் ஒரு நீட்சியாகும். பெண்களின் உரிமைகள் கடுமையாக மீறப்பட்டுள்ளன. இத்தகைய செயல்கள் நேபாளத்தின் நற்பெயருக்குக் களங் கத்தை ஏற்படுத்தியுள்ளன.

காத்மண்டுவில் நிலைமை இவ்வளவு தூரம் சென்றிருக்கக்கூடாது. பொலி ஸாரின் துப்பாக்கிச்சூடு ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாகும். முதல் நாளி லேயே துப்பாக்கிச்சூடு நடத்தாமல் ஏற்பட்ட சூழ்நிலையை கட்டுப்படுத்தியிருக்க முடி யும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சம்பவங்களுக்கான சாத்தி யமும் ஓர் ஆபத்தான சூழ்நிலையாகும். கூகுள், பேஸ்புக் மற்றும் யூடியூப் போன்ற அமெரிக்காவுக்குச் சொந்தமான சமூக ஊடக நிறுவனங்கள் உலகெங்கிலும் உள்ள நாடுகளில் அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கு அளித்துள்ள வாய்ப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது.

நேபாளம் நீண்ட காலமாகப் பல பிரச் சினைகளைக் கொண்டிருந்தது. அரசாங் கம் அவை தொடர்பில் கவனம் செலுத்த வில்லை. தெற்காசிய பாரம்பரியத்தின்படி, கடுமையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், அனைவரும் அன்றாட அர சியலில் கவனம் செலுத்தினர். இது இளை ஞர்களிடையே பெரும் விரக்தியை ஏற் படுத்தியுள்ளது. இதற்கிடையில், சமூக ஊடகங்களை முழுமையாகத் தடை செய்ததால் நெருக்கடி மேலும் வெடித்தது.

நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றக் கட்டடங்கள் நாட்டின் ஜனநாயக நிறுவனங் களாகக் கருதப்படுகின்றன. மேலும் அவை அவற்றினுள் இருப்பவர்களால் வரையறுக்கப்படுவதில்லை. நாடாளுமன் றத்தையும் நீதிமன்றத்தையும் எரிப்பது நேபாளத்தின் ஜனநாயகத்துக்கு ஒரு பெரிய அவமானமாகும். எவ்வாறாயி னும் இறுதியில் அரசலமைப்பு இல்லாத ஒரு நேபாளமே எஞ்சியுள்ளது. அதிகா ரத்தைக் கைப்பற்றிய இராணுவத்தின் பொறுப்பு, நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதும், அரசமைப்பின் படி தேர் தலை நடத்துவதும் ஆகும்.

புத்தரின் பிறப்பிடமான நேபாளம், இலங்கைக்கு ஒரு தனித்துவமான நட்பு நாடாகும். அவ்வாறிருக்கையில் காட்டுமிராண்டித்தனமான செயல்களை இத்தகைய நாட்டில் பொறுத்துக்கொள்ள முடியாது. அரசு நிர்வாகத்தில் காட்டப்பட்ட திறமையின்மையும் இந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என எண்ணத் தோன்றுகின்றது.

சமூகத்தில் இணக்கமாக ஒன்றுகூடி, இணக்கமாகக் கலந்துரையாடி, இணக்க மாகக் கலைந்து செல்ல வேண்டும் எனப் புத்தர் போதித்தார். புத்தர் போதித்த "சப்த அபரிஹானி தர்மய"வை நேபாளத்தின் தற்போதைய அரசாங்கம் ஒரு முன்மாதிரி யாக எடுத்துக்கொள்ளும் என நம்புகின் றேன்." – என்றுள்ளது.

---

## விஜேராம இல்லத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இன்று வியாழக்கிழமை வெளியேற வுள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மூத்த செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்பு ஊட கம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிர சாதங்களை நீக்கும் சட்டமூலம் நாடாளு மன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டதை யடுத்து மஹிந்த ராஜபக்ஷ விஜேராம இல்லத்தில் இருந்து இன்று வெளியேற முடிவு செய்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது.

அம்பாந்தோட்டை – தங்காலையில் உள்ள அவரது இல்லத்துக்கு இன்று மாலை 4 மணியளவில் மஹிந்த ராஜ பக்ஷ செல்லவுள்ளார் என்றும் அறியமுடி கின்றது.

தங்காலையில், முன்னாள் ஜனாதிப தியை வரவேற்கும் விழா ஒன்றையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின் றது.

---

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எனினும், தேர்தல் நடத்தும் முறைமை தொடர்பில் அரசுக்குள் குழப்பம் இருப்பது தெரியவந்திருக்கின்றது.

நேற்று நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவை நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்தில் 07

# மலையக அதிகார சபை ஒருபோதும் மூடப்படாது!

## மனோ எம்.பியிடம் அமைச்சர் சமந்த உறுதி



“மலையக அதிகார சபை என அறியப்படும் பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை மூடி விட மாட்டோம். அதைத் தொடர்ந்து முன்னெடுப்போம்.”

– இவ்வாறு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, தமிழ் முற்போக்குக் கூட்டணியின்தலைவர்மனோகணேசன்எம்.பியிடம் நேரடியாக உறுதி அளித்துள்ளார்.

இது பற்றி மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:–

“மலையக அதிகார சபை என அறியப்படும் பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை மூடி விட மாட்டோம். அதைத் தொடர்ந்து முன்னெடுப்போம் என துறை சார் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் என்னிடம் தனிப்பட்ட உறுதிமொழியை அளித்தார்.

கல்வி, காணி, வீடு, சுகாதாரம், சமூக மேம்பாடு, வருமான–வேதனதேவைபாடு, வறுமை ஒழிப்பு ஆகிய பல்வேறு துறைகளில் பின் தங்கியுள்ள மலையகப் பெருந்தோட்ட மக்கள் வளர்சி அடைய வேண்டுமானால், இந்தபல்வேறுதுறைசார்அமைச்சுகளின் பணிகள் கூட்டி இணைக்க பட வேண்டும். இந்த நோக்கத்தில் மலையக மக்களின் விசேட குறைதீர் கொள்கை தேவையை அடிப்படையாகக் கொண்டு, எமது நல்லாட்சியின் போது கொண்டு வரப்பட்ட, 2018 ஆம் வருட 32 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிறுவனமே, மலையக அதிகார சபை ஆகும்.

ஒரே பணியைச் செய்யும் ஒன்றுக்கு மேற்பட்ட அரச நிறுவனங்களை மூடி விட, இன்றைய அரசு, பிரதமர் தலைமையில் மைத்த குழு முடிவு செய்து, அது அமைச்சரவையின் ஒப்புதலையும் பெற்றுள்ளது.

இப்படி அடையாளம் காணப்பட்ட 33 அரச நிறுவனங்கள் மத்தியில், மலையக அதிகார சபையும் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தச் சபையையும் மூடி விட்டு, அதன் பணிகளை ஒரு அமைச்சின் பிரிவு ஒன்றுக்கு வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு தவறான புரிதல் ஆகும்.

இந்நிலையில் நாம் எமது எதிர்ப்பை பல மட்டங்களில் வெளியிட்டு இருந்தோம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இது தொடர்பில் நான் எனது ஆட்சேபனைக் கடிதத்தை அனுப்பி இருந்தேன். இந்தப் பின்னணியில் துறைசார் அமைச்சர், மலையக அதிகார சபையை மூடி விட மாட்டோம் எனக்குத் தனிப்பட்ட முறையில் உறுதி அளித்துள்ளார்.

இது தொடர்பில் ஒரு அமைச்சரவை குறிப்பு ஒன்றைச் சமர்பித்து முந்தைய அமைச்சரவை முடிவை, துறைசார் அமைச்சர் வாபஸ் வாங்க வேண்டும். இதை இந்த அமைச்சர் செய்வார் என நினைக்கின்றேன்.

இது எமக்குக் கிடைத்துள்ள ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதி வெற்றி ஆகும். அதிகாரபூர்வமான அமைச்சரவை முடிவு வரும் வரை நாம் அமைதியாக இந்த விடயத்தை அவதானிப்போம்.” – என்றார்.

# மின்கம்பத்தில் மோதி வான் விபத்து! 11 வயது சிறுவன் பரிதாப உயிரிழப்பு!!

## நால்வர் காயங்களுடன் வைத்தியசாலையில்

வான் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் 11 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் மாவத்தகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி – குருநாகல் பிரதான வீதியில் 6ஆவது மைல் கல்லுக்கருகில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

கண்டி நோக்கிப் பயணித்த வான் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் வானில் பயணித்த சாரதி உட்பட இரு ஆண்கள், இரு பெண்கள், ஒரு சிறுவன் என ஐந்து பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், படுகாயமடைந்த சிறுவன் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

11 வயதுடைய மாவத்தகம பகுதியைச் சேர்ந்த சிறுவனே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மாவத்தகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நால்வரும் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மாவத்தகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மாகாண சபைத்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)
சாணக்கியன் எம்.பி. தனியாகச் சந்தித்து சுமார் அரை மணி நேரம் உரையாடினார் எனத் தெரியவருகின்றது.

அந்தச் சமயத்திலேயே மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டில் நிச்சயமாக நடக்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார், சாணக்கியன் எம்.பியிடம் நேரில் உறுதி கூறினார்.

“மாகாண எல்லை நிர்ணயத்தைச் செய்து கொண்டுதான் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசு முடிவு எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றதே. அதைச் செய்து முடிப்பதாயின் நீண்ட காலம் செல்லும். அடுத்த ஆண்டிலும் மாகாண சபைத் தேர்தல் நடத்த முடியாது” – என்று சாணக்கியன் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார் எனத் தெரிகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மாகாண சபைகள் தொடர்பான தொகுதிகளின் எல்லை நிர்ணயங்கள் முடிவடைந்த பின்னர்தான் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என்று அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், அத்தகைய முடிவு எதனையும் அரசு எடுக்கவில்லை என்றும், கட்சித் தலைவர்களோடு கலந்துரையாடி அது பற்றி தீர்மானிக்கப்படும் என்றும் நேற்று தம்மைச் சந்தித்த சாணக்கியனிடம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கூறினார் எனத் தெரியவருகின்றது.

அத்தகைய முடிவு அரசால் எடுக்கப்பட்டிருப்பதாக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் இலங்கை அரசுத் தரப்பால் கூறப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றனவே என்று சாணக்கியன் எம்.பி. நேரடியாக ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டினார் என்றும் அறியவருகின்றது.

அப்படி இருக்காது என்ற தொனியில் பதிலளித்த ஜனாதிபதி, “மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்பதை ஜெனிவாவுக்கு நாங்கள் தெரிவிக்கலாம். தெரிவித்துள்ளோம். ஆனால் மாகாண எல்லை நிர்ணயங்கள் பற்றிய விடயங்களின் பின்னர்தான் தேர்தல் நடத்தப்படும் என்று தகவலை எல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு நாம் ஏன் தெரிவிக்க வேண்டும்?” என்று சாணக்கியனிடம் வினாவினார் எனவும் தெரியவந்தது.

ஆயினும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு இலங்கை உத்தியோகபூர்வமாக அனுப்பிய பதிலில் மாகாண எல்லை நிர்ணயம் முடித்த பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படிப் பார்த்தால், மாகாண எல்லை நிர்ணய விவகாரங்களை முடித்த பின்னர்தான் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்ற அரசின் நிலைப்பாடு, அரசுத் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்குத் தெரியாமல் – அல்லது அவரது இணக்கத்தைப் பெறாமல் – ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு இலங்கையின் பதிலாக அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றதா என்று கேள்வி விடயம் அறிந்த வட்டாரங்களில் எழுப்பப்படுகின்றது.



# சர்வதேச துடுப்பாட்ட மைதானம் மண்டைதீவில் சாத்தியமாகுமா?

- ந.லோகதயாளன் -

( இறுதிப் பகுதி)

இதுவரை சுட்டிக் காட்டிய உண்மைகளின் அடிப்படையில் இடம்பெறும் விடயங்களின் பின்னணியில், மண்டைதீவில் சர்வதேசத் துடுப்பாட்ட மைதானம் சாத்தியமாகுமா என்றும், வேண்டுமா, வேண்டாமா எனக் கேட்டால் நிச்சயமாக வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

இருந்தபோதும் இது உடனடியாக சாத்திய மாகுமா என்ற வினாவிற்குப் பதிலளிக்க முடிய வில்லை. சாத்தியப்பட்டால் நல்லது என்றே பதிலளிக்க முடியும்.

ஏனெனில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் ஏப்பிரல் மாத இறுதியில் மன்னாரில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகை தந்த நாட்டின் ஜனாதிபதி மே மாதம் தலைமன்னாரில் இருந்து நாட்டின் எல்லைத் தீடைகள் வரையில் சுற்றுலாப் பயணிகள் படகு சேவை இடம்பெறும் என்று கூறினார்.

சுற்றுலாப் பயணிகள் படகு சேவையை பொறுத்த மட்டில் தனியாரின் முதலீடு. ஆகவே அரச நிதி ஒதுக்கீடு இன்றியும் செயல்படுத்தக்கூடிய திட்டம். இருந்தபோதும் இன்றுவரை அது வெறும் வாய்ப் பேச்சிலேயே நிற்கின்றது. ஜனாதிபதி கூறி 4 மாதம் கடந்துவிட்டபோதும் அத் திட்டம் நடைமுறைக்கு வரும் சாத்தியத்தை இன்றும் காண முடியவில்லை.

மனண்டைதீவு சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைப்பதானால் பல நூறு மில்லியன் ரூபாக்களையும் தாண்டி, பல நூறு கோடி ரூபாக்கள் தேவையான திட்டத்திற்கு இதுவரை அரசு நிதி ஒதுக்கும் நடவடிக்கையைஜ் காண முடியவில்லை.

அரச நிதி அன்றி துடுப்பாட்ட சபையின் நிதியில் அமைக்கக் கூடும் என எதிர் பார்த்தால் அங்கும் இதுவரை எந்த அறிவிப்போ, ஒப்பந்தமோ காணவில்லை.

அவ்வாறானால் வெறும் கை முழம் அளக்குமா என்ப்சதுதான் இங்கே அளிக்கும் பதிலாக அமைகின்றதே அன்றி இத் திட்டம் வரக் கூடாது என்ற எண்ணம் எள் அளவும் கிடையாது. இதேநேரம் இக் கட்டுரையாளரும் மண்டைதீவு பூர்வீகமாகக் கொண்டவர், அதனால்தான் தம் மண் பறிபோகின்றது என்று அவர் இப்படிப் பிரலாபிக்கின்றார் என்று கூறினால் அதுவும் தப்பு. ஏனெனில் அவர் மண்டைதீவுடன் தொடர்பற்றவர்.

ஆக, மண்டைதீவில் சர்வதேசத் துடுப்பாட்ட மைதானம் சாத்தியமானால் சந்தோஷம். ஆனால் அது சாத்தியமாகுமா என்பதுதான் சந்தேகத்தை எழுப்பும் கேள்வி.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சமாந்தர அதிகார மையம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குள் இரண்டு வெவ்வேறான அதிகார மையங்கள் இருப்பது ஓரளவுக்கு வெளிப்படையாகப் புலனாகத் தொடங்கியுள்ளது.

நாட்டினது நிறைவேற்று அதிகாரம் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், ஜனாதிபதியுமான அநுர குமார திஸநாயக்கா வசமே உள்ளது. ஆட்சியின் தலைவரும், ஆட்சியை நடத்தும் தேசிய மக்கள் சக்தி கூட்டின் தலைவரும் அவரே. ஆகவே அதிகார மையம் அவரைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளது என்றே கருதப்படுகின்றது. அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஆனால், அவருக்குப் புறம்பாக, அரசில் இடம் பெறாமல், அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்றின் செயலாளராக இருக்கும் ரில்வின் சில்வாவும் தனியான ஓர் அதிகார மையம் போல அரசுக்குள் செயல்படுகின்றார் என்ற குற்றச்சாட்டு வெளிப்படையாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவா அல்லது ரில்வின் சில்வாவா என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் அண்மையில் கேள்வி எழுப்பியிருந்தார். இதே போன்ற கேள்வியை நாடாளுமன்றத்திலும் அதே தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் எழுப்பியிருந்தார்.

இப்போது ரில்வின் சில்வாவே நிழல் ஜனாதிபதியோ என்று கருதும் போக்கில் விடயங்கள் இடம்பெறுகின்றன.

மாகாண எல்லை நிர்ணயம் தொடர்பான விவகாரம் தீர்க்கப்பட்ட பின்னர்தான் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று யாழ்ப்பாணத்தில் வைத்து ரில்வின் சில்வா அறிவிக்கிறார்.

அவர் அறிவித்த பின்னர் அதே விடயம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கைக்கு இலங்கை அரசு சமர்ப்பித்த பதிலில் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஆனால் நேற்று சாணக்கியன் எம்.பியை நேரில் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி அநுரகுமாரதிஸநாயக்க அப்படி எல்லை நிர்ணயத்தின் பின்னர்தான் மாகாண சபைத் தேர்தல் என்ற நிலைப்பாட்டை அரசு எடுக்கவில்லை என்றும், கட்சித் தலைவர்களுடன் பேசி தேர்தலை எப்படி நடத்துவது என்று முடிவெடுக்கப்படும் என்றும், அப்படி எல்லை நிர்ணயம் முடிந்த பின்னர்தான் மாகாண சபைத் தேர்தல் என்ற கருத்தை நாங்கள் ஜெனிவாவில் போய் ஏன் தெரிவிக்கப் போகின்றோம் என்றும் கூறி இருக்கின்றார்.

ஆனால் அவரது கருத்தை மீறி - அல்லது அவரது கருத்து நிலைப்பாட்டுக்கு மாறாக, ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் அப்படித்தான் இலங்கை அரசு சார்பில் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அது உண்மை என்பதால், அநுர குமார திஸநாயக்கவுக்கு அப்பால், அவரையும் தாண்டி, இன்னொரு அதிகார மையம் இதே அரசுக்குள் வலிமையாகச் செயல்படுகின்றது என்பதுதான் அர்த்தம்.

ஜனாதிபதி தமது அரசுக் கட்டமைப்பை நேரத்துடன் திருத்திக் கொள்வது, அவரது இருப்புக்கு அவசியமானது என்று நினைக்கின்றோம்.



# த.வெ.க. தொண்டர்கள் மரத்தில் ஏறி நிற்கக் கூடாது; விஜய்யின் திருச்சி பிரச்சாரத்துக்கு 23 நிபந்தனைகள்

விஜய் 30 நிமிடங்கள் மட்டுமே பேச வேண்டும், தொண்டர்கள் மரத்தில் ஏறி நிற்க கூடாது என்பன உள்ளிட்ட 23 நிபந்தனைகளுடன் திருச்சியில் த.வெ.க. தலைவர் பிரச்சாரம் செய்வதற்கு மாநகர பொலிஸார் அனுமதி அளித்துள்ளனர்.

திருச்சி மரக்கடை எம்.ஜி.ஆர். சிலை முன்பு செப்ரெம்பர் 13ஆம் திகதி த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரம் செய்ய அனுமதி கோரி அக்கட்சியின் நிர்வாகிகள் திருச்சி மாநகர பொலிஸிடம் மனு கொடுத்தனர். மனுவை பரிசீலித்த பொலிஸார் 23 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியுள்ளனர்.

அதன்படி, த.வெ.க. தலைவர் விஜய் 30 நிமிடங்கள் மட்டுமே பேச வேண்டும். சென்னை புறவழிச்சாலை, டி.வி.எஸ். டோல்கேட், தலைமை தபால் நிலையம், பாலக்கரை, காந்தி மார்க்கெட் வழியாக மரக்கடை வரும் விஜய், மீண்டும் காந்தி மார்க்கெட், அரியமங்கலம் பால் பண்ணை வழியாக சென்னை புறவழிச்சாலைக்கு சென்றுவிட வேண்டும். ஆனால், 'ரோடு ஷோ' நடத்த அனுமதியில்லை. விஜய்யின் வாகனத்துடன் மொத்தம் 5 வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

மருத்துவ வசதிகள், நோயாளர் காவு வண்டிகள், தீயணைப்பு வாகனங்கள் அனைத்தும் அக்கட்சியினரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குழந்தைகள், கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகளை அழைத்து வரக்கூடாது. கட்சித் தொண்டர்கள் மிக நீளமான கம்பங்களில் கொடியை கட்டி எடுத்து வரக் கூடாது. உயரமான கட்டடங்கள், மரங்களில் ஏறி நிற்க தொண்டர்களுக்கு அனுமதி இல்லை.

விஜய் வரும்போது பட்டாசு வெடிக்கக் கூடாது. மேளதாளங்கள் இசைக்கக் கூடாது. அனுமதியின்றி பிளக்ஸ் பேனர்கள் வைக்கக் கூடாது. பார்க்கிங் வசதிகளை அவர்களே ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட 23 நிபந்தனைகளை திருச்சி மாநகர பொலிஸார் விதித்துள்ளனர். இதற்கு த.வெ.க. நிர்வாகிகள் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ளனர்.

# கர்நாடகாவில் வனத்துறை அதிகாரிகளை புலிக் கூண்டில் அடைத்த கிராம மக்கள்!



கர்நாடக மாநிலத்திலுள்ள சாமராஜ நகர் மாவட்டத்தைச் சேர்ந்த கிராம மக்கள் ஒன்றிணைந்து வனத்துறை அதிகாரிகளை புலி கூண்டில் அடைத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சாமராஜநகர் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியை ஒட்டிய விவசாய நிலங்களில் புலிகள் நடமாட்டம் உள்ளதாகவும், கால்நடைகளை கொன்று வருவதாகவும் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

ஆனால் வனத்துறையினர் புலியை பிடிக்க உரிய நடவடிக்கை எடுக்காமல், பெயளரவுக்கு கூண்டு வைத்துவிட்டு மட்டும் சென்றுவிடுகின்றனர் என தெரிவித்தனர்.

இந்நிலையில் அங்கு ஆய்வுக்கு சென்ற வனத்துறையினரை, கிராம மக்கள் முற்றுகையிட்டு கேள்வி எழுப்பினர்.

அப்போது முறையாக பதில் அளிக்கவில்லை என தெரிவித்து, வனத்துறை அதிகாரிகள், ஊழியர்கள் பத்து பேரையும் புலியை பிடிக்க அமைத்த கூண்டில் கிராம மக்கள் அடைத்துள்ளனர்.

இந்நிலையில் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் வனத்துறை அதிகாரிகளை மீட்டுள்ளனர்.

இதனிடையே வனப்பகுதியில் கடினமான சூழலில் பணிபுரியும் வனத்துறையினர் மீதான இந்த செயல், அவர்களது மன உறுதி, பணி சூழலை பாதிக்கும் என்று விமர்சனம் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.












# பிரான்ஸில் அரசுக்கு எதிராக மக்கள் முற்றுகை போராட்டம்

## 200 பேர் கைது

பிரான்ஸ் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள், "அனைத்தையும் தடுப்போம்" என்ற பிரச்சாரத்தை செயல்படுத்தினர்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

பிரான்ஸ் பிரதமர் பிரான்சுவா பேய்ரு தலைமையிலான அரசு மூன்று நாள்களுக்கு முன்பு நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி அடைந்தது. இதையடுத்து பிரான்சுவா பேய்ரு பதவியை இராஜினமா செய்தார். புதிய பிரதமராக செபஸ்டியன் லெகோர்னுவை ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரோன் நியமித்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து "அனைத்தையும் தடுப்போம்" என்ற பிரச்சாரம் சமூக ஊடகங்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டது.

தலைநகர் பரிஸ், மார்செய்ல், லியோன், போர்தோ உட்பட முக்கிய நகரங்களில் பெரும் அரச எதிர்ப்பு முற்றுகைப் போராடடங்கள், தீயிடல் சம்பவங்கள் உட்பட்ட வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

பிரான்ஸ் முழுவதும் ஏறக்குறைய 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கலவர நிலைமையைத் தடுப்பற்காக நேற்று நண்பகல் வரை பாதுகாப்பு தரப்பால் 200 இற்கும் மேற்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என பதவி விலகும் உள்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளில் தலைநகர் பரிஸில் மட்டும் 132 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பரிஸின் முக்கிய ரயில் நிலையமான கார் து நோட்டின் நுழைவாயில்கள் பொலிஸால் தடுக்கப்பட்டு நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் உள்ளே நுழைய எடுத்த முயற்சி தடுக்கப்பட்டது.

மேற்படி நிலையத்திற்கு வெளியே கூடியிருந்த போராட்டக்காரர்களை கலைக்க கண்ணீர் புகை குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

அதன் அருகில் தமிழர்களின் அதிக வணிகநிலையங்கள் அமைந்துள்ள லா சப்பலுக்கு சென்ற தமிழர்கள் பலரும் இந்த சம்பவங்களில் சிக்கிக்கொண்டதுடன் கண்ணீர் புகைவீச்சு பாதிப்புக்கு சிலர் ஆளாகியுள்ளனர்.

இதேபோல பிரித்தானியாவுக்கான யூரோஸ்டார் ரயிலுக்கு செல்லவிருந்த பயணிகளும் சிரமப்பட்டுள்ளனர். நாடளாவிய முற்றுகை போராட்டத்தை தடுக்கும் முன்னெச்சரிக்கையாக நாடு முழுவதும் சுமார் 80,000 பாதுகாப்பு தரப்பினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இதில் 30 இற்கு மேற்பட்ட பாதுகாப்பு அணிகள் பரிஸ் பிராந்தியத்தில் மட்டும் நிலைகொண்டுள்ளன. நாடாளவிய ரீதியில் இவர்களுக்கு உதவியாக பல கவச வாகனங்களும் 26 ஹெலிக்கொப்டர்கள் சேவையில் இருந்தன.

நெருக்கடியில் சிக்கியுள்ள அரச தலைர் இம்மானுவேல் மக்ரோன், தற்போது தனது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் செபஸ்டியன் லெகோர்னையும் ஒரு பலிக்கடாவாக மாற்றியுள்ளார் என விமர்சனங்கள் வந்துள்ளன.


ஐந்தாவது பிரெஞ்சுக்கு குடியரசில் இவ்வளவு கடுமையான நெருக்கடி முன்னர் ஒருபோதும் ஏற்படாத நிலையில் இந்த நெருக்கடியின் நீட்சி ஜனாதிபதி மக்ரோனையும் ஆட்சியில் இருந்து அகற்றும் என்ற நிலையை உருவாக்கியுள்ளது.


















# நேபாளத்தில் தொடரும் பதற்ற நிலை; நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு

தொடரும் வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்த நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு மற்றும் தடை உத்தரவுகளை நேபாள இராணுவம் விதித்துள்ளது.

மக்கள் தொடர்பு மற்றும் தகவல் இயக்குநரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேபாளத்தின் காத்மாண்டு, போகாரா, புட்வால், பைரஹாவா பரத்பூர், இட்டாஹறி மற்றும் டமாக் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் நேபாள ஜென் சி எனப்படும் தலைமுறையினரின் தொடர் போராட்டம் தீவிரமடைந்த நிலையில் கலவரமாக வெடித்துள்ளதுடன் அந்நாட்டு தீப்பற்றி எரிந்து கொண்டுள்ளது.

இந்த நிலையில், நேபாளத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் பொறுப்பை நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இராணுவத்தால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு மற்றும் தடை உத்தரவுகள் நேற்று மாலை 5:00 மணி வரை நடைமுறையில் இருந்தது. அதன் பிறகு, இன்று காலை 6:00 மணி முதல் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது

எதிர்காலத்தில் பாதுகாப்பு நிலைமையைப்பொறுத்துமேலும்முடிவுகள்எடுக்கப்படும் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.







# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த முயற்சிக்கின்றதாம் அநுர அரசு

## இப்படி அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



“மாகாண சபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்துவதே அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது.” – என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை இலங்கை அரசு நடத்த வேண்டும் என்று ஜெனிவாக் கூட்டத் தொடரில் இந்தியா முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“குறித்தொகுக்கப்பட்ட காலத்தில் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் கால எல்லை பற்றி எனக்கு உறுதியாகக் கூற முடியாது. அதற்குரிய சட்டதிருத்தங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனினும், கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்படும்.” – என்றார்.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டம் பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

“அந்தச் சட்டம் நிச்சயம் நீக்கப்படும். அதற்குரிய நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. நிகழ்நிலை காப்புச் சட்டமும் மறுசீரமைக்கப்படும்.” – என்றார்.

# இரத்தக் காயங்களுடன் இரண்டு சடலங்கள் மீட்பு!




வெவ்வேறு இடங்களில் வீடுகளில் இருந்து இரத்தக் காயங்களுடன் இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டம், திவுலப்பிட்டிய பிரதேசத்தில் வீடு ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரத்தக் காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திவுலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மாத்தளை மாவட்டம், மஹவெல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரத்தக் காயங்களுடன் வயோதிபரின் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய வயோதிபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரும் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேற்படி இருவரும் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்காக அந்தந்தப் பிரதேச வைத்தியசாலைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு சடலங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பில் வயோதிபத் தம்பதி மீது கூரிய ஆயுதங்களால் கொடூர தாக்குதல்

வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத இருவர், அங்கிருந்த வயோதிபத் தம்பதியைக் கூரிய ஆயுதங்களால் தாக்கிப் படுகாயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பு – முகத்துவாரம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது என்று முகத்துவாரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

68 வயதுடைய வயோதிபத் தம்பதியே இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனர். இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோவில் சென்ற இனந்தெரியாத இருவரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.




தாக்குதலில் படுகாயமடைந்த வயோதிபப் பெண்ணுக்கும் வெளிநாட்டில் உள்ள அவரது சகோதரிக்கும் இடையில் உள்ள காணித் தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முகத்துவாரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இன்று மடத்தடி ஸ்ரீ சுந்தரேஸ்வரர் சிவனாலய குடமுழுக்கு

**- வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா -**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மருதநில மகாராணி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் பரிவார ஆலயமான சுந்தரேஸ்வரர் சிவன் ஆலயம் இன்று வியாழக்கிழமை மகா கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) காண்கிறது.

இலங்கை நாட்டில் இருக்கிற ஒரேயொரு மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இருக்கும் ஒரேயோரு சுந்தரேஸ்வரர் ஆலயம் இதுவாகும்.

அம்பாறை மாவட்ட தமிழ்க் கூறும் மக்களின் கலை, கலாசார பாரம்பரிய பண்பாட்டின் தனித்துவ அடையாளமாக விளங்கும், 500 வருடங்களுக்கு மேல் வரலாற்றை கொண்ட மீனாட்சி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் கடந்த 06.04. 2022 இல் கோலாகலமாக நடைபெற்றது .

அன்று அதிகாலையில் இச்சிவன் ஆலயத்திற்கான அழகிய சிவலிங்கம் தமிழ் முறைப்படி பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. அன்று 'மரகதம்' எனும் சிறப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மதம் என்பது மனிதனிடத்தில் ஏலவே இருக்கின்ற தெய்வீகத்தை வெளிப்படுத்தல் என்கிறார் வீரத் துறவி சுவாமி விவேகானந்தர். கடவுள், மதம் மற்றும் ஆன்மிக கருவூலங்களைக் கைவிடாமல் பிடித்துக் கொண்டிருப்பதால்தான் நம் நாடு இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றார் அவர் .

ஆம், மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டதும் வன்னிமையின் சிற்றாட்சி நிலவிய பகுதியில் அமைந்ததுமான மீனாட்சியம்பாள் திருத்தலத்தின் மேற்கே காணப்படுவது இச் சிவன் ஆலயம்.

கிபி 14ஆம் நூற்றாண்டில் சிங்காரபுரியை ராஜதானியாக கொண்டு ஆட்சி செய்த வன்னிய ராஜசிங்கன் என்ற மன்னன் அமைத்தது மீனாட்சியம்மாள் ஆலயமாகும்.

அதேவேளை, அங்கு மேற்கே வயல்வெளிக்கு மத்தியில் இருக்கக்கூடிய புராதன சிவன் ஆலயம் சோழர் காலத்தில் கட்டப்பட்டது என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

சோழர் இலங்கையில் பொலநறுவையை மையமாகக் கொண்டு 52 ஆண்டுகள் ஆட்சி செய்த காலத்தில் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது .

பொலநறுவை ராஜ்யம் என்பது அநுராதபுர இராச்சியத்தை சோழர்கள் கைப்பற்றிய பின்னர் அவர்களால் இலங்கையில் உருவாக்கப்பட்ட இராஜ்ஜியம் ஆகும் .

கிபி 1017 – கி.பி. 1236 காலகட்டத்திற்குரிய இக் காலத்தை முதலில் "மும்முடி சோழ மண்டலம்" என அழைக்கப்பட்டது. இலங்கை நீர்வள நாகரீகத்தின் பொற்காலமாக அதனைக் குறிப்பிடலாம்.

ராஜேந்திர சோழன் இப்பகுதியை ஆட்சி செய்த பொழுது ஜனநாதபுரம் என்றும் அழைக்கப்பட்டது. அவர்கள் 52 ஆண்டுகள் அங்கு ஆட்சி செய்தார்கள்.

இவர்களது காலத்தில் இலங்கையில் இந்து மதம் நன்றாக பரவியது எனலாம். பொலநறுவையில் உள்ள சிவன் கோயிலும் அதில் ஒன்று. அது இன்றும் இருக்கிறது. அதன் பின்னணியில் சோழர்களால் மடத்தடியில் சிவனாலயம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. எனினும் 16ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் இலங்கையை ஆக்கிரமித்த ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர்கள் கிறிஸ்தவ மதவெறி கொண்டு செயல்பட்டதனால் இந்து கோயில்களை அழித்துச் சேதமாக்கினர்.

அதற்குள் மண்டூர் முருகன் ஆலயம், திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் என்பனவும் அடங்கும். அந்த அடிப்படையில் மடத்தடி சிவனாலயம் அழிக்கப்பட்டு இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது .

அதன் பின்னர் அந்த ஆலயம் தூர்ந்து காடு

தொடர்ச்சி ▼

# இன்று மடத்தடி ஸ்ரீ சுந்தரேஸ்வரர் சிவனாலய குடமுழுக்கு

தொடர்ச்சி ▲

மண்டிக்கிடந்தது. அதைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் ராஜநாகம் குடிகொண்ட பாரிய புற்று இன்றும் உள்ளது. அன்றிருந்த சுனையுமுள்ளது.

அவ்வேளையில் மட்டக்களப்பு ஆதீன ஏற்பாட்டில் தமிழ் மந்திரங்கள் உச்சாடனத்துடன் அங்கு அழகிய சிவலிங்கம் ஒன்று அரோஹரா கோஷம் முழங்க கும்பாபிஷேகமன்று அதிகாலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் அந்தப் பகுதியிலே சிவலிங்க வழிபாடு இடம் பெற்று வந்த காலை, அட்டப் பளத்தைச் சேர்ந்த திருமதி கமலாதேவி விவேகானந்தம் குடும்பத்தினர் அதனை சிவனாலயமாக கட்டியெழுப்ப வேண்டும் என்று எமது பரிபாலன சபையிடம் விடுத்த வேண்டுகோள் இன்று குடமுழுக்கு காண்கின்ற நிலைமைக்கு வந்திருக்கின்றது .

ஒரு பரிவாரக் கோயில் எவ்வாறு ஆகம முறைப்படி அமைய வேண்டுமோ அவ்வாறு மிகுந்த செலவிலே சகல ஐஸ்வர்யங்களையும் கொண்டு சகல சிறப்புக்களையும் கொண்டு இந்த சிவனாலயம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது .

இந்த ஆலயத்துக்கு தேவையான களஞ்சிய அறை, மின்சாரம், தண்ணீர் வசதி உள்ளிட்ட அத்தனை வசதிகளையும் அவர்களே தாமாக மனப்பூர்வமாக முன்வந்து செய்தமை இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது .

ஆலய முகப்பில் மேல் தளத்தில் ஆறு அடி உயர அழகிய சிவன் சிலை நிறுவப்பட்டுள்ளது. சைவத்தைக் காத்த சமயகுரவர்கள் நால்வர் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோரது சிலைகள் அந்த மண்டபத்தில் உள்ளே நிறுவப்பட்டிருக்கின்மை மற்றும் ஓர் சிறப்பம்சமாகும்.

மத்தியிலே சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது .பின்புறம் பாணலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கின்றது.

மொத்தத்திலே தென்றல் வீசுகின்ற மனோரம்யமான வயலும் வயல் சார்ந்ததுமான நெய்தல் நிலத்திலே சுற்றிவர களனிகள் நிறைந்த பிரதேசத்தில் இவ் ஆலயம் இன்று குடமுழுக்கு காண்பது என்பது சிறப்பானதாகும். ஆலய பரிபாலன சபையின் தலைவர் கி.ஜெயசிறில் மற்றும் ஆலோசகர் வித்தகர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் பரிபாலன சபையினரின் ஒத்துழைப்பில் இவ் ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேக கிரியைகள் நடைபெற்று வருகின்றன..

கும்பாபிஷேக கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் ஆலோசனையில் கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ இரத்தின மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவஸ்ரீ சபா கோவர்த்தன சர்மா முன்னிலையில் நடைபெற்று வருகின்றன.

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நடைபெறுகின்ற சம காலத்திலே அதுவும் சுந்தரேஸ்வரர், பிரியாவிடை, மீனாட்சி அம்பாள் சகிதம் தினமும் அங்கு திருவிழாக்கள் இடம் பெற்று வருகின்ற வேளையிலே, இங்கு சுந்தரேஸ்வரர் ஆலயம் கும்பாபிஷேகம் காண்பது உண்மையிலே சிறப்பானதாகும் .

அட்டப்பளத்தைச் சேர்ந்த பரோபகாரி ஆன் மீகச் செம்மல் திருமதி கமலாதேவி விவேகானந்தம் கொடுத்து வைத்தவர். வரலாற்றில் தனி முத்திரை பதிக்க அம்பாள் அவருக்கு அருள் புரிந்துள்ளார்.

அவரது புத்திரி திருமதி அகந்தினி எனது மாணவி. அவரது துணைவர் ரஞ்சன் ஆகியோரெல்லாம் பாக்கியம் செய்தவர்கள். அவர்கள்

இரவு பகல் பாராமல் இந்த பணியிலே முழுமூச்சாக நின்று செயற்பட்டதனால் இன்று அவ் அழகிய ஆலயம் குடமுழுக்கு காண்கிறது.

ஆலயத்தின் சமகால ஆலோசகர் என்ற வகையிலே அவர்கள் என்னை அடிக்கடி தொடர்பு கொண்டு அத்தனை செயற்பாடுகளையும் கேட்டுக் கேட்டு கலந்துரையாடி செய்திருந்தார்கள்.

அவர்களுக்கு எம்பெருமானின் அருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு, இக் குடமுழுக்கு வைபவம் சீரும் சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.



# வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி குருநாகலுக்கு இடமாற்றம்

(கி.வசந்தன்)

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு குருநாகல் மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதுடன், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகரியாக வேறு ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வரும் ஜெயக்கொடிக்கு குருநாகல் மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அவரது இடத்திற்கு வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக மாத்தளையில் கடமையாற்றிய பீ.எஸ்.டிறட்ரண நியமிக்கப்பட்டுள்ளார். அவர் விரைவில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

# தம்பலகாமம் வயல் பகுதியில் தீ மூட்டப்பட்டதால் அதிக புகை காரணமாக போக்குவரத்துப் பாதிப்பு



திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பலகாமம் – கிண்ணியா பிரதான வீதியின் முள்ளியடி வயல் நிலப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை தீ மூட்டியதால் அந்தப் பகுதி புகையால் மூடப்பட்டு, பிரதான வீதியினூடான போக்குவரத்தும் தடைப்பட்டது.

நெல் அறுவடை முடிவடைந்த நிலையில் வயல் பகுதிகளில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை காரணமாக அந்தப் பகுதி குடியிருப்பாளர்கள் மற்றும் வீதி ஊடாகப் பயணிப்பவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்குகிறார்கள்.

இவ்வாறான நிலை குறித்தும், இதன் தாக்கம் பற்றியும் உரிய அதிகாரிகள் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான வீதியை அண்மித்த இந்த வயல் நிலப் பகுதியில் தீ வைப்பு நடவடிக்கையால் அதிக புகை வெளியேற்றப்பட்டு, அதனால் பாதிக்கப்படுவோர் சுவாச நோய் உள்ளிட்ட பல இடர்களை எதிர்நோக்கலாம்.

வயலில் தீ மூட்டியதன் பிற்பாடு வயலுக்கு சொந்தமானவர்கள் வீட்டுக்குச் சென்று விடுகின்றனர். பின்னர் அதிக காற்றுக் காரணமாக தீ மோசமடைந்து அங்கும் இங்கும் அதிகமான புகை வெளியேற்றப்படுகிறது.

எனவே இவ் விடயம் தொடர்பில் விவசாயிகளும் அவதானமாக செயற்பட வேண்டும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.



# மீனவர்களின் நன்மைகருதி முல்லைத்தீவில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமையுங்கள்!

## கடற்றொழில் அமைச்சிடம் ரவிகரன் எம்.பி. கோரிக்கை



(விஜயரத்தினம் சரவணன்)

மீனவர்களின் நன்மைகருதி முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடற்றொழில் அமைச்சைக் கோரியுள்ளார்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் சாலை, வட்டுவாகல், நாயாறு உள்ளிட்ட பகுதிகள் துறைமுகம் அமைப்பதற்கு ஏற்ற இடங்களாகக் காணப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டிய ரவிகரன், உரிய நிபுணர்களைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு, பொருத்தமான இடத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கடற்றொழில் அமைச்சைக் கோரியுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரனால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவில் 74 கிலோ மீற்றர் தூரமான கரையோரப. பகுதி காணப்படுகின்றது. இந்தக் கரையோரப்பகுதிகளில் பெருமளவான மீனவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் முல்லைத்தீவிலுள்ள மீனவர்களுக்குத் துறைமுகமில்லாத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு, வட்டுவாகல், சாலை எனத் துறைமுகம் அமைப்பதற்குப் பொருத்தமான இடங்கள் காணப்படுகின்றன.

இந்த இடங்களில் துறைமுகம் அமைப்பதற்கு பொருத்தமான இடம் எது என்பதை உரிய துறைசார்ந்த நிபுணர்கள் ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும். அத்தோடு முல்லைத்தீவு மீனவர்களின் நன்மைகருதி விரைவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் துறைமுகமொன்று அமைக்கப்படவேண்டும். – எனக் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, அத்தீர்மானத்தை கடற்றொழில் அமைச்சிற்கு அனுப்பிவைக்குமாறு கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதிஅமைச்சர் ஆகியோரால் இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை சார்ந்த அமைச்சுடனும் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒரு துறைமுகமொன்றை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தாம் கரிசனையுடன் இருக்கின்றார் என இதன்போது கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் ஆகியோரால் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# எல்ல விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு சாவகச்சேரி நகர சபையில் அஞ்சலி



(த.சுபேசன்)

கடந்த வாரம் பதுளை – எல்ல வனப் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக சாவகச்சேரி நகரசபை அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று புதன்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற நான்காவது அமர்வின் போதே சபை உறுப்பினர் யோகநாதனின் வேண்டுகோளிற்கு அமைவாக சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வு நகரசபைத் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ் தலைமையில் உறுப்பினர்களுடைய பங்குபற்றுதலோடு இடம்பெற்றது.

எல்ல விபத்தில் 15பேர் பலியாகியமையுடன் பலர் படுகாயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் எதற்காக, யாரால் கொலை செய்யப்பட்டார்?

## அதற்கு முன்பே தகவல் வெளியானது என்கிறார் ஈ.பி.டி.பியின் ஸ்ரீகாந்த்

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் யாரிடம் இருந்து அச்சுறுத்தல்களை எதிர்கொண்டார், என்ன காரணத்திற்காக அந்த அச்சுறுத்தல் ஏற்பட்டது என்பன போன்ற விடயங்கள், அவர் கொலை செய்யப்படுவதற்கு முன்னரே வெளிப்படுத்தப்பட்டு இருந்தன எனத் தெரிவித்த ஈ.பி.டி.பியின் ஊடக செயலாளர் பன்னீர்செல்வம் ஸ்ரீகாந்த், பொன் சிவபாலனைக் கொலை செய்வதற்கான கிளைமோர் பொருத்தப்பட்டது. அதற்கு யார் யாரெல்லாம் உடந்தையாக செயற்பட்டார்கள், இது தொடர்பான விசாரணைகளை எவ்வாறு அமுக்கினார்கள் போன்ற ஆதாரங்கள் எம்மிடமும் இருக்கின்றன, அவை விசாரிக்கப்படுமாயின் அந்த ஆதாரங்களைச் சமர்ப்பிதற்கு நாமும் தயாராகவே இருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

நேற்று யாழ் ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஊடகவியலாளர் நிமலராஜன் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 ஆம் திகதி கொலை செய்யப்பட்டார்.

2000 ஒக்டோபர் 10ஆம் வெளியாகிய 'சுடர் ஒளி' பத்திரிகையில் வெளியாகிய செய்தியில் நிமலராஜனுக்கு எந்த தரப்பினால் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது என்பதும் அதற்கான காரணம் என்ன என்பதும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றது.

அன்றைய காலச்சூழலில் நிமலராஜனுடன் நெருக்கமாகப் பணியாற்றிய மூத்த பத்திரிகையாளரினால் 'விண்ணன்' என்ற புனை பெயரில் எழுதப்பட்ட அந்த விளக்கமான கட்டுரையில் ஈ.பி.டி.பி. கட்சிக்கும் நிமலராஜனுக்கும் முரண்பாடு இருப்பதாகவோ, நிமலராஜனுக்கு ஈ.பி.டிபியினால் அச்சுறுத்தல் இருக்கின்றது என்றோ ஒரு வசனம் கூட சொல்லப்படவில்லை. இதுதான் உண்மை. இவ்வாறுதான் அனைத்து குற்றச்சாட்டுக்களும் இட்டுக் கட்டப்படவையகவே இருக்கின்றன.

ஆனால் ஒரு விடயம். கடந்த காலங்களில் நிமலராஜன் மட்டும் கொலை செய்யப்படவில்லை. இந்த மண்ணிலே பல துறைசார் ஆளுமைகள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவை பற்றியும் விசாரிக்கப்பட வேண்டும். அவ்வாறான கொலைகளுக்கு உடந்தையாக செயற்பட்ட பல ஆசாமிகள் இப்போதும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான சில ஆசாமிகள்தான், எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைத் தூசுதட்டி எம்மை சிக்க வைக்க ஆர்வமாக செயற்படுகின்றனர் எனவும் சொல்லப்படுகிறது. அவ்வாறானவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஈ.பி.டி.பியை நோக்கி அவர்கள் சுட்டுவிரலை நீட்டும் போது ஏனைய நான்கு விரல்களும் அவர்களை நோக்கியே இருக்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது .

உதாரணமாக யாழ் மாநகர சபையின் முன்னாள் மேயர் சறோஜினி யோகேஸ்வரன் கொலை செய்யப்பட்டிருக்கிறார். பொன் சிவபாலன் போன்ற பலர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். பொன் சிவபானில் கொலை செய்வதற்கான கிளைமோர் பொருத்தப்பட்டது. அதற்கு யார், யாரெல்லாம் உடந்தையாக செயற்பட்டார்கள், இதொடர்பான விசாரணைகளை எவ்வாறு அமுக்கினார்கள் போன்ற ஆதாரங்கள் எம்மிடமும் இருக்கின்றன. அவை விசாரிக்கப்படுபாயின் அந்த ஆதாரங்களைச் சமர்ப்பிதற்கு நாமும் தயாராகவே இருக்கின்றோம்.

எவ்வாறாயினும், எமக்கு எதிரான விடயங்கள் தொடர்பாக மகிழ்ச்சி அடைகின்றோம். எமக்கு எதிரான தரப்புக்கள் எதிர்பார்ப்பது போன்று, தற்போதைய அரசியல் சூழலில் எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வெளிப்படைத் தன்மையோடு, நீதியான முறையில் விசாரிக்கப்பட்டு, உண்மைகள் வெளிப்படுகின்ற சூழல் உருவாக்கப்படுமாயின் எமக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுக்களும் இட்டுக்கட்டப்பட்ட பொய்கள் என்பது நிரூபிக்கப்படும் என்பதில் எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கின்றது.

எனவே அனைவருக்கும் ஒரு விடயத்தினை தெளிவாக சொல்கின்றோம். எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா சார்பில் பகிரங்கமான சவாலாக சொல்கின்றேன். எமக்கு எதிராக ஆதாரங்கள் இருக்கமாயின் உரிய இடங்களில் அவற்றை முறைப்பாடுகளுகாகவோ பதிவு செய்யுங்கள். அவை தொடர்பான விசாரணைகளை எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். சமூக ஊடகங்கள் ஆதாரங்களை வைக்கப் பொருத்தமான இடங்கள் அல்ல என்பதை தெரிந்து கொள்ளுங்கள்" - என்று மேலும் தெரிவித்தார்.

# மண்டைதீவுப் படுகொலைகள் தொடர்பில் உடனே விசாரணைகளை முன்னெடுங்கள்

## ஜனாதிபதி அநுரவுக்கு டக்ளஸ் கடிதம் மூலம் கோரிக்கை





மண்டைதீவுக் கொலைகள் தொடர்பாக வெளியாகியுள்ள கருத்துக்களின் அடிப் படையில் விசாரணைகளை முன்னெடுத்து மக்களுக்கு உண்மைகளை வெளிப் படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு தமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் கடிதம் எழுதப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந்த் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவை விசாரிக்கப்படுமாயின் நாமும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க தயாராகவே இருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நேறு யாழ் ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறிகையில் –

"ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்ற நிலையில், ஏற்கனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரின் அறிக்கையில் கடந்த காலங்களில் இந்த நாட்டிலே இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக இலங்கை இராணுவத்தினரும் புலிகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் அவை பேசு பொருளாக இருப்பதனை தவிர்க்கும் நோக்கிலும், கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம்பெற்ற அனைத்து விடயங்களும் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்படும் என்று தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக சொல்லி வருகின்ற நிலையில், கடந்த காலங்களில் எமக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மீண்டும் பேசு பொருளாக்கி எம்மை அரசியல் களத்தில் இருந்து முழுமையாக அகற்ற வேண்டும் என்று உள்ளூற விரும்புகின்ற பிர கிருதிகளும், இதன்மூலம் புலி ஆதரவு தரப்பினரை மகிழ்விக்க முடியும் என்று கணக்கு போடுகின்றவர்களும், தங்களுடைய அனைத்து வளங்களையும் பயன்படுத்தி எமக்கு எதிரான செயற்பாடுகளை, பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அதற்காக, கடந்த காலங்களில் எமது கட்சியின் செயற்பாட்டாளர்களாக இருந்து, கட்சி நிலைப்பாடுகளுக்கு மாறாக சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டதன் காரணமாக கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட சிலர் விலைக்கு வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றமையையும் அவதானித்து வருகின்றோம்.

தன்னுடைய வாழ்நாளையே தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்காக அர்ப்பணித்து மானசீகமாக மக்களுக்காக உழைத்து வருகின்ற – தன்னை நோக்கி வருகின்ற சவால்களை எல்லாம் எதிர்கொள்ளும் நெஞ்சுரம் மிக்க – தலைமைத்துவ ஆளுமையான தோழர் டக்ளஸ் தேவானந்தாவை தலைமையாகக் கொண்டு செயற்படுகின்ற நாம் இவ்வாறான சமூக ஊடகப் பரபரப்புக்கள் குறித்து அலட்டக்கொள்ளவில்லை.

எமக்கு எதிரான குற்றசாட்டுக்கள் அனைத்தும் அந்தந்தக் காலப் பகுதியில் எமக்கு எதிராக சுமத்தப்பட்ட பொய்கள் என்பதை உறுதியாக சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். – என்றும் அவர் தெரிவித்தார்.

# பூநகரி முட்கொம்பன் பொதுச்சந்தை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைப்பு





பூநகரி முட்கொம்பன் பகுதி பொது மக்களது நலன்கருதி கட்டிமுடிக்கப் பட்ட முட்கொம்பன் பொதுச்சந்தை நேற்றுப் புதன்கிழமை உத்தியோகபூர்வமாக மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது.

பூநகரி பிரதேசசபை தவிசாளர் சிறீரஞ்சன் மற்றும் துணைத் தவிசாளர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

யுத்த காலங்களில் பூநகரியின் வாடியடி மற்றும் அயலிருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்த வேளை முட்கொம்பன் அவர்களுக்கு அடைக்கலம் வழங்கியிருந்தது.

இந்நிலையில் போதிய அடிப்படை வசதிகள் ஏதும் கிட்டாத பிரதேசமாக முட்கொம்பன் அமைந்துள்ள நிலையில் முக்கியதொரு படிக்கல்லாக பொதுச்சந்தை அனைத்து வசதிகளுடனும் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அடுத்துவருங்காலங்களில் ஐந்து கடைத்தொகுதிகள் கொண்ட கட்டடத்தொகுதியொன்றும் முட்கொம்பனில் நிர்மாணித்து வழங்கப்படுமென தவிசாளர் சிறீரஞ்சன் தனது உரையில் உறுதியளித்துள்ளார்.

# மக்கள் விரோத – மண்கொள்ளை சபையாக மாறி வருகின்றதாம் வவுனியா மாநகரசபை!

## உறுப்பினர் பிறேமதாஸ் காட்டத்துடன் குற்றச்சாட்டு

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபை மக்கள் விரோத சபையாகவும், மண்கொள்ளை சபையாகவும் மாறி வருகிறது என வவுனியா மாநகர சபையின் பண்டாரிக்குளம் வட்டார உறுப்பினர் சி.பிறேமதாஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சோலை வரி தொடர்பில் முதல்வர் தன்னிச்சையாகவும், சர்வதிகாரமாகவும் செயற்பட்டு வருகின்றார் என்பது எனது கருத்து. வவுனியா மாநகரசபை மக்கள் விரோத சபையாகவும், மண்கொள்ளை சபையாகவும் மாறி வருகிறது. சபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 10 பேரினதும் கருத்துக்களைக் கேட்காது, அவர்களது உறுப்புரிமைக்கு மதிப்பளிக்காது, முதல்வரும், அவருடன் இணைந்தவர்களும் தன்னிச்சையாக செயற்பட்டு வருகின்றனர்.

ஏனைய மாநகர சபைகளில் இவ்வாறான அதிகரிப்பு செய்யப்படவில்லை. ஆனால் வவுனியா மாநகர சபை சபை மட்டும் அதிகரித்துள்ளது. ஏனைய சொத்துக்களின் வருமானத்தை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்காது ஆதன வரியை மட்டும் அதிகரித்துள்ளார்.

மக்கள் நலனுக்காகவும், மக்களுக்காகவும் எனக் கூறி மக்களிடம் இருந்து அதிக ஆதனவரி அறவிட்டு மக்களை பொருளாதார சுமைக்குள் தள்ளியுள்ளனர். வவுனியா மாநகரசபைக்கு 2024



இல் நகரசபையாக இருக்கும் போது 24 மில்லியன் ரூபா வருமானம் சோலை வரியால் மட்டும் வந்துள்ளது. மொத்த வருமானம் 337.2 மில்லியன் ஆகும். சோலை வரி உயர்த்தப்பட்டு மாநகரசபை மேயரால் 8, 10 வீதம் என உயர்த்தப்பட்டுள்ளது. எம்மால் 5, 8 வீதம் என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவர்களின் கருத்துப்படி சோலை வரியால் மட்டும் 272 மில்லியன் ரூபா வருமானமாக வருகின்றது. முன்னைய சோலை வரி வருமானத்தை விட 250 மில்லியன் அதிகமாகக் கிடைக்கிறது.

அரசாங்கம் மாநகரசபை ஊழியர்களின் சம்பளத்தில் 40 வீதத்தை மாநகரசபை செலுத்த வேண்டும் எனக் கூறிய காரணத்தால் தான் சோலை வரியை குறைக்க முடியவில்லை என தெரிவித்தார். அது முற்று முழுதான பொய். மாநகரசபை கொடுக்கினற சம்பளம் 100 மில்லியன் என்றால் அவர்கள் 40 மில்லியன் ரூபா தான் செலுத்த வேண்டியுள்ளது. அரசாங்கமே மெல்ல மெல்லமாகத் தான் சம்பளத்தைப் பொறுப்பேற்கச் சொல்லியுள்ளது. ரூபா 40 மில்லியனுக்காக 272 மில்லியன் ரூபாவாக அறவிடுகிறார்கள்.

எமது நாடு செல்வந்த நாடா? 30 வருட யுத்த தேசமாக இருந்து மக்கள் பொருளாதார சிக்கல்களையும், எதிர்கொண்டு பிள்ளைகளை படிக்க வைக்க முடியாத நிலையில் உள்ளனர். மாநகர சபையின் சோலை வரி மக்கள் மீது திணிக்கப்படுகிறது. தான் அதிக வாக்குகள் பெற்று வந்தார் எனவும் அதனால் மாநகரததை காபற் வீதியாகவும், வடிகாலமைப்பை செய்யவும் அதிக பணம் தேவை எனவும் கூறுகிறார்.

மகளள் பசியுடன் இருக்கும் போது காபற் வீதியில் இருந்தால் பசி போகுமா? அபிவிருத்தி அடையத்தான் வேண்டும். அதற்காக மக்கள் எம்மை அனுப்பி வைத்துள்ளார்கள். எமது மக்கள் பாதிக்காத வகையில் அதனை கொண்டு செல்ல வேண்டும். மக்களை பாதிக்கும் செயற்பாட்டை நிறுத்த வேண்டும். வரிச் சுமையை குறைக்க வேண்டும். தன்னிச்சையாக பழிவாங்கும் போக்கை நிறுத்த வேண்டும். நாம் மக்களுக்காகப் பயணிப்போம். மாநகர சபையின் சொத்துக்கள், வருமானம் இருக்கின்றன. நாடாளுமன்ற, மாகாண சபை நிதிகள் வருகின்றன. அவற்றை கொண்டு இன்னும் முன்னேற்ற முடியும். அபிவிருத்தி செய்ய பல வழிகள் உள்ளன. வரியை உயர்த்த வேண்டாம். – என்றார்.

# டிஜிட்டல் தொழில் நுட்ப உபகரணங்கள் யுனிசெவ் அனுசரணையில் வழங்கி வைப்பு





(ஏ.எச்.ஹஸ்பர்)

யுமடநடரைள மொழி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ருஜேஊநுகு நிறுவனம் பங்களிப்பின் அடிப்படையில், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்த டிஜிட்டல் தொழில்நுட்பக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை மெதடிஸ்ட் மகளிர் கல்லூரியில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது.

திருகோணாமலை மாவட்டத்தில் 12 பாடசாலைகள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கு.குணநாதன், மாகாண கல்வி பணிப்பாளர் ஹசந்தி மற்றும் யுனிசெவ் அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நெறி பாடசாலை மாணவர்களுக்கு கணினி ஊடாக மென்பொருள் தயாரிக்கப்பட்டு ஆங்கில கல்வியை மேம்படுத்தும் புதிய செயல்முறை இதுவாகும். அக்யூலியஸ் எனும் மென்பொருள் இதற்கு பயன்படுகின்றன.

வழங்கப்பட்ட உபகரணங்களில் ஸ்மார்ட் போர்ட், லப்டொப் மற்றும் இனிய டிஜிட்டல் உபகரணங்களும் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

இங்கு ஆளுநர் கருத்து தெரிவிக்கையில் –

மாணவர்களின் 13 ஆண்டு கல்வி முடிவின் பின்பு ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியாதுள்ளது. இதற்கான காரணங்களை கண்டறிந்து ஆசிரியர்கள் அதற்கு தயார் நிலையில் இருக்க வேண்டும். முறையாகக் கல்வியை வழங்குவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை பெற முடியும். – எனத் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் -11.09.2025




உங்கள் மனதில் உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் ஓடும். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மேற்கொள்வதன் மூலம் உங்கள் பதற்றத்தைக் குறைக்கலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். கூடுதல் பணிகள் உங்களுக்கு சுமையாக தெரியும். உங்களை நிரூபிக்க நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தை போக்கை காண்பிப்பீர்கள். உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட நட்பான அணுகுமுறை மற்றும் மனம் திறந்த பேச்சு அவசியம்.

அதிக பொறுப்புகள் காரணமாக தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது உங்கள் தனித் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் தரமான நேரத்தை செலவு செய்வீர்கள். உங்கள் துணையை உங்கள் நண்பர் வீட்டுக்கு அழைத்துச் செல்வீர்கள். இது உங்கள் இருவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு அதிகமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் முழுமையாக இருக்கும். உங்கள் ஆற்றல் அதிகமாக காணப்படும்.




இன்று நற்பலன்கள் காண்பதற்கு சாதகமான நாள். கடினமான சூழ்நிலையையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்களின் தன்னம்பிக்கை மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் உங்கள் பணிகளை சிறப்பாக மேற்கொள்வீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள். நீங்கள் எளிதில் உயர்நிலை அடைவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே அன்பு காணப்படும். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான தருணங்களை ஒன்றாக பகிர்ந்து கொள்வீர்கள்.

நீங்கள் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்யலாம். நீங்கள் இன்று லாபம் அடையும் நாள்.




உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி காண மாட்டீர்கள். புதிய விஷயங்களைக் கற்று வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் உங்கள் முயற்சிகள் வீணாகும். பொறுமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் இனிமையான சூழ்நிலை இருக்காது. நிலுவைப் பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு எழும்.

நிதி வளர்ச்சிக்கு இது சாதகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளின் நலனுக்காக செலவு செய்ய நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக இன்று அமைதியின்மை காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்றைய செயல்கள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் அன்றாட செயல்களில் கவனம் தேவை. பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க உரையாடுவதற்கு முன் யோசித்து செயல்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதல் அளிக்கும்.

சக பணியாளர்களை கையாள்வது கடினமாக உணர்வீர்கள். அவர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்வார்கள். நீங்கள் பொறுமையாக நிலைமையைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு மேற்கொள்வீர்கள். நீங்கள் அவரிடம் எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தாதீர்கள்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும்.




இன்று நற்பலன்'கள் கூடுதலாக கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்கள் கடின உழைப்புக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




இன்று அதிர்ஷ்டம் அதிக அளவு காணப்படும். நீங்கள் எந்தச் செயலை செய்தாலும் அதனை முழுமையாகச் செய்வீர்கள். உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக வெற்றி காண்பீர்கள்.

புதிய வேலை வாய்ப்புகள் காணப்படும். வெற்றி காண நீங்கள் இத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்தில் சுப விஷயங்கள் நடைபெறும். நீங்கள் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்கள் கடின உழைப்பு காரணமாக இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நேர்மறை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் வெற்றி காண கடுமையாக போராட வேண்டும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாக இருக்க வேண்டும்.

பண வரவு அதிகமாக காணப்படாது. உங்கள் சேமிப்பு அதிகரிக்கவும் குறைந்த வாய்ப்பே காணப்படும்.

கண்களில் பார்வைக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளதால் கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 11.09.2025




இன்று மந்த நிலை காணப்படும். மனக் குழப்பங்கள் காணப்படும். பாதகமான விளைவுகள் ஏற்படாமல் தவிர்க்க கவனமாக செயலாற்ற வேண்டும். இன்றைய சவால்களை சந்திக்க மிகவும் பொறுமை அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வதில் ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும். சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்வதிலும் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

இன்று சில செலவுகள் நேரலாம். அவை தவிர்க்க முடியாததாக இருக்கும். செலவுகளை கட்டுபடுத்துவது நல்லது.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறப்பாக ஆக்கிக் கொள்ளலாம். புதிய மனிதர்களின் சந்திப்பு மற்றும் தொடர்புக்கு வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் கண்ணோட்டம் விரிவடையும்.

இன்று நீங்கள் பல பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். இதனால் பணிகள் அதிகமாக இருக்கும். இந்த நிலைமையை நீங்கள் திறமையாக சமாளிக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு அல்லது வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடன் நல்லிணக்கம் பராமரிக்க நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண விஷயத்தில் இன்று அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.




இன்று அபாரமான வாய்ப்பு காணப்படுகின்றது. உங்கள் இலக்குகளை எளிதில் அடைவதற்கான தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் இலக்குகளை குறுகிய நேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு காணப்படும். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள உங்கத தருணம்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதியதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று மனதில் பதற்றம் காணப்படும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம். பிரச்சினைகளை சமாளிக்கலாம். வாக்குவாதங்களை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள கவனமுடன் பணியாற்ற வேண்டும். உங்கள் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளும் போது பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வோடு பேச வேண்டும். உறவை பாதிக்கும் தேவையில்லாத விஷயங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. அதிகரிக்கும் செலவுகளை தவிர்க்க இயலாது. இது உங்களுக்கு வருத்தம் உண்டாகும்.

# நிமலராஜன் கொலை விசாரணையின் அறிக்கை மட்டக்களப்பிலும் வெளியீடு







ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை விசாரணையின் போக்குத் தொடர்பான அறிக்கை மட்டக்களப்பிலும் வெளியிடப்பட்டது.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை தொடர்பான அறிக்கை சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்ட அமைப்பினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மட்டு ஊடக அமையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் அறிக்கை வெளியிடப்பட்டது.

இதன்போது நிமலராஜனின் உருவப் படத்திற்கு சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகவியலாளருமான பா.அரியநேந்திரனினால் அறிக்கையின் முதல் பிரதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கையளிக்கப்பட்டதுடன் அறிக்கையின் பிரதிகள் கலந்து கொண்ட ஏனையோருக்கும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் ஊடகவியலாளர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்போர் கலந்து கொண்டனர்.